முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அம்பிகானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.02.2019, திங்கட்கிழமை

1. **பழிக்கஞ்சா படுபாதகம் வழி**
**பகைமை கொண்டு பாய்ந்தவையும் மானிடா**
**வழிகாட்டி அழியாமை எனும்**
**வள்ளல் மார்க்கம் நெறி காட்டுகின்ற**
2. காட்டுகின்ற ஆறுமுக அரங்கன்
கருணைமிக்க அருளுபதேசங்கள்
கேட்டுவர இழிவான கதிநிலை மாறி
கேடில்லா பாதுகாப்பு பண்புமிக்க
3. மிக்கநல் தெளிவு கண்டு தேறுவீரென
மேன்மைபட அரங்க ஞானி அழைக்க
ஊக்கமுடன் வாரீர் ஒழுக்க நெறி வாழ
ஒன்று சேர்வீர் என்று கூறி இனிதே
4. இனிதே நித்ய பிரசன்ன ஆசியை
இயம்பிடுவேன் அம்பிகானந்தர் யானும்
கனிவுபட உயர் மக்களாக மாற
கண்ணியமான வாழ்வு நலம் பெற
5. நலம்பெற கலிவாழ் மக்களே
ஞானதேசிகனார் காட்டுகின்ற
வளம் தரும் சன்மார்க்க சுத்தநெறி
வழிமொழிந்து ஏற்று வருதலுற
6. வருகவே சாத்வீக குணம் நிறைந்து
வஞ்சம் கொள்ளை நோக்கமிலா
தருமசிந்தை தயவு மிக்கவர்களாக
தரணியில் மாறி ஞானவான் ஆவீர்
7. ஆவீரே அன்றாட தேவைகளை
அணுகும் பிரச்சனைகளை கூட
அவணியில் எளிதாக வெல்லும்
ஆற்றல் மிக்கவர்களாகி சிறப்பர்
8. சிறப்பான மனிதர்கள் ஆவதுடன்
சிறப்பான இல்லறம் நடத்தி
மறுப்பிலா சமூக நலத்தையும்
மனமுவந்து காக்கும் சக்தியுள்ளவர்களாகி

9. ஆகியே அரங்கன் தேடுகின்ற
அறம் வழி உண்மை சீடர்களாகி
அகிலம் வியக்கும் ஞானியர் கூட்டங்கள்
அய்க்கியமாகும் தகுதி வாய்ப்பு பெறுவர்

10. வாய்ப்பருளும் வடிவேலா அரங்கா
வரம் தா என வேண்டி தொடர
மெய்ஞான வழியாக அரங்கன்
முருகன் சக்தியாக முழுமைபட வந்து

11. வந்துமே காப்பார் மீட்பாரப்பா
வழி மீறுபவர்களையும் மாற்றி தேற்றி
சிந்தை தெளிவுபட சித்தி ஆக்கி அருளுவாரப்பா
செப்பிய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அம்பிகானந்தர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

தான் செய்வதே சரியென்று தமது அறிவை நம்பி பழிபாவங்களுக்கு அஞ்சாமல், கௌரவத்தின் பெயராலும், இன்னும்பல காரணங்களுக்காகவும் படுபாதக செயல்களை மற்றவர் மீது கொண்ட பகையினால் அதன் பின் விளைவுகளை எண்ணி மனம் மாறாது பாவச்செயல்களை செய்திட முனைப்பாக செயல்படுகின்ற மனித வர்க்கமே நீங்கள் மனம் திருந்தி பழிபாவங்களுக்கு அஞ்சி கோபம்தனை விட்டு, படுபாதக செயல்களை செய்யாமல் பிறரை மன்னிக்க கற்றுக் கொண்டு மீண்டு வாருங்கள், நீங்கள் புண்ணியங்கள் செய்து அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை அடையலாம் என்றே வழிகாட்டி அவர்களை வள்ளல் வகுத்த ஜீவகாருண்ய நெறியினில் வழிநடத்தி வழிகாட்டுகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் கருணைமிக்க அருள் உபதேசங்களை கேட்கின்றவர்களும், கேட்டு கடைப்பிடித்து நடக்கின்றவர்களுக்கும், அவர்களுக்கு உண்டான விதியும் கதியும் மாறி இழிவான நிலையில் இருந்து மீண்டு பழிபாவங்கள் அண்டாமல் கேடற்ற வாழ்வை அருள் பாதுகாப்புமிக்க வாழ்வை நற்பண்புகள் தனை பெற்று அறிவில் தெளிவடைந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள் என்றே உலகேரை உயர்வான நிலை வைத்து, உண்மையுடன் தாயன்போடு அரங்கமகானும் கருணையோடு மனிதசமுதாயத்தை அழைக்கின்றார். ஆதலினால் உலகோரே அரங்கமகானை முழுமனதாய் ஏற்று ஊக்கமுடன் அரங்கன் உபதேசம் கேட்டு அரங்கனை பின்தொடர ஊக்கமுடன் வாரீர் ஒழுக்க நெறி நின்று, ஒன்று சேர்ந்து பகையில்லாத ஒற்றுமையான வாழ்வை வாழ்ந்து ஒன்றுபட்ட சமுதாயமாக சேர்வீர் எனக் கூறியே அரங்கன் மகிமையினால் ஒன்றுபட்ட சமுதாயம் உலகினில் அமைந்திடவே **விளம்பி வருடம் தை மாதம் 28ம் நாள் 11.02.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனை அம்பிகானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அம்பிகானந்தர்.

கனிவுமிக்க உயர் மக்களாய் மாறி, கண்ணியமான நல்வாழ்வை பெற்று நலமுடன் வாழ வேண்டுமாயின் மாமாயை சூழ்ந்திட்ட கலியுகத்தினில் வாழும் மக்களே கலியுக அவதார ஞானி யுகமாற்ற ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற வளம் தரும், வல்லமை தரும் ஞானமும் தருகின்ற தூய சன்மார்க்க நெறியினை உளமார ஏற்றுக் கொண்டு வாழ்வினில் கடைப்பிடித்து வாழ்ந்து வர வேண்டும்.

அரங்கனின் தூயநெறியினை ஏற்று வாழும் மக்களுக்கு தீமையான வன்குணங்கள் எல்லாம் விலகி சாத்வீகமான குணம் உள்ளமெல்லாம் நிறைந்து வஞ்சம் மறைந்து கொள்ளை செய்யும் எண்ணங்களும் விலகி, தருமசிந்தையும் தயவும் பெருகி நல்லோர்களாக மாறி உலகம் போற்றும் ஞானவான்களாக ஆகிடுவீர்கள்.

அரங்கனின் நெறியில் வாழ்ந்துவர, உங்களது அன்றாட பிரச்சனைகள் எல்லாம் எளிதில் வெல்வீர்கள். அன்றாட தேவைகளையும் எளிதில் பெற்று சிரமம் இல்லாத வாழ்வை ஆற்றலுடன் வாழ்ந்து ஆற்றல்மிக்கவர்களாக அஞ்சாதவர்களாக ஆகி சிறப்படைவீர்கள்.

சிறப்புமிக்க மனிதர்களாக ஆவதுடன் தமக்கு உண்டான இல்லறத்தை செம்மையாக நடத்தி இல்லற வாழ்வை சிறப்புடன் வாழ்வதுடன் சமூக நலனிலும் அக்கறை உடையவராக திகழ்ந்து சமூக நலனையும் மனமுவந்து காக்கின்ற சக்தி உள்ளவர்களாக வல்லமை பெற்று இல்லறத்தையும் சமூக நலனையும் காக்கின்ற வல்லவர்களாக ஆகி ஆறுமுக அரங்கன் ஞானமடைய தேடும் தகுதியுடைய நன்மக்களாக ஆகி அரங்கனின் அறத்தின் வழிதனிலே தவறாமல் நடந்து அரங்கன் மனம் மகிழும் உண்மை சீடர்களாக ஆகி உலகமே வியக்கும்படியாக உலக ஞானியர்களின் கூட்டத்தினுள் ஐக்கியமாகும் ஞானியாக ஆகும் தகுதியையும் ஞானியாக ஆகும் வாய்ப்பையும் பெறுவார்கள்.

முருகா, அரங்கா, ஆறுமுக அரங்கமகா தேசிக அண்ணலே, எம்பெருமானே, குருநாதா, நான் போற்றும் தாயும் தந்தையும், குருவும், சாமியும், தெய்வமும் நீயே. ஆதலால் தாம் பெற்ற பேரின்ப நிலையை, மெய்ஞானத்தை அடியேனும் பெற்றிட அருள் செய்யுங்கள் தாயே! எம்மையும் ஒரு பொருட்டாய் மதித்து இந்த பாவிக்கும் மனம் இரங்கி அருள் புரியுங்கள் தாயே, அரங்கமகா தேசிகனே, வரம் தாருங்கள் அய்யனே என மனம் உருகி வேண்டி வரவர, மெய்ஞான சக்தியாக அன்பர் அறிவுனுள் கலந்து முருகப்பெருமானின் சக்தி வடிவினில் முழுமையாக வெளிப்பட்டு உங்களை காப்பார், காத்துமே உங்களை மீட்பார். ஞானவழியில் சென்றாலும் வழி தவறும் அன்பர்தமையும் மாற்றி தேற்றி அவர்கள் மயக்கத்தினை போக்கி உண்மையை விளக்கி சிந்தையை தெளிவித்து குருஉபதேசம் செய்து தெளிவுபட உணர்த்தி சித்திகளையும் தந்தருளி தமதாக்கிக் கொள்வார் மெய்ஞான குருநாதன் ஆறுமுக அரங்கமகான் என தமது பிரசன்ன ஆசி நூல் மூலம் குரு அரங்கன் பெருமை உரைக்கின்றார் மகான் அம்பிகானந்தர்.

–சுபம்–